“ எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு ”

“ எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு ”

17/4/79

இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்க வெளியீடு

# சோதிடபரிபாலினி

## சித்தார்த்தி சித்திரை இதழ்

**14-4-79.**

உள்ளே......


சித்தார்த்தி ஹூ சித்திரை மீ கிரகசஞ்சாரம்
,  ,  விசேஷ தினங்கள்
,  ,  சுபதினங்கள்
சோதிடம் (வானசாஸ்திரப்பகுதி)
சித்திரை மாத பலன் இலங்கைக்கு
,  ,  கோசரபலன்
விவாகவிஷயமும் ஜாதகப்பொருத்தமும்
விரதம்
அங்கங்களின் அதிஷ்டம்
நவமியிற் சி[illegible]ந்தது மஹா நவமி
‘ழ’ வின் சிறப்பு
பல்லி சொல்வதற்குப் பலன் உண்டா ?
நவரத்தின மோதிரம்


விலை ரூபா **1-00**


ஆசிரியர்
இ. வெங்கடேச ஐயர்



சோதிடபரிபாலன மடம்
கொக்குவில்

17/4/79

உ

சிவமயம்



" ஓதி டத்திட முள்ளவ ருய்யுமா
ருதி வேதத்தி னங்கமொ ராறனுட்
சோதி டப்பரி பாலினி சொல்வான்
மாதிடத்தன் மலரடி போற்றுவாம் ".

# சோதிட பரிபாலினி

மலர் 1 | சித்தார்த்திவருஷம் சித்திரைமாதம் | இதழ் 11

## சித்தார்த்தி சித்திரை 1-ம் தேதிமுதல் 31-ம் தேதிவரை கிரகசஞ்சாரம்

| | | | |
|---|---|---|---|
| செவ் புத | சூரி | | |
| சுக் கேது | சித்தார்த்தி வருஷ சித்திரைமீ 1உ — 31உ கிரகநிலை | | குரு |
| | | | சனி ராகு |
| | | | |

சந்திரன் : துலாம் முதல் தனுவரையும் சஞ்சரிப்பார்.

செவ்வாய் . காலை வெள்ளியாகக் கிழக்கே தோற்றிவருவார்.

புதன் : புதன் 17ம் திகதிவரை காலைவெள்ளியாகக் கிழக்கே தோற்றிவருவார்.

குரு : கிழக்கே தோற்றிவருவார்.

சுக்கிரன் : காலைவெள்ளியாகக் கிழக்கே தோற்றிவருவார்.

சனி : கிழக்கே தோற்றிவருவார்.

5உ நாடி 35 விநாடி 17 (முன்னிரவு மணி 8-08)-ல் மீனசுக்கிரன்
17உ நாடி 52 விநாடி 26 (பின்னிரவு மணி 2-55 )-ல் மேடபுதன்
25உ நாடி 7 விநாடி 57 ( முற்பகல் மணி 9-06 )-ல் மேடசெவ்வாய்
30உ நாடி 9 விநாடி 26 ( பிற்பகல் மணி 1-39 )-ல் மேடசுக்கிரன்
புதன் : 18உ நாடி 38 விநாடி 00 ( முன்னிரவு மணி 9-09 ) கிழ அஸ்த.

குடும்பஸ்தன் ஒருவன் தன் மனதில் ஒரு பகுதியைத் தெய்வ வழிபாட்டுக்கென்றே ஒதுக்கிவைக்கவேண்டும். கால்பங்கு மனதைக் கடவுளுக்குக் கொடுத்துவிட்டு உலக கிருத்தியங்களை அவன் செய்யட்டும். ஆனால் சாது ஒருவன் முக்காற்பங்கு மனதைக் கடவுளுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான். காற்பங்கு மனதைக்கொண்டு தேக சம்ரக்ஷணை போன்ற காரியங்களை அவன் பார்த்துக்கொள்ளட்டும்.

— இராமகிருஷ்ண பரமஹம்சர்

## எமது ஆதரவாளர்களுக்கு
## சித்தார்த்தி புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## சித்தார்த்தி வருடம் சித்திரைமாதம் விடசஷ தினங்கள்

சித்திரை 1 சனி சித்தார்த்தி வருஷப்பிறப்பு — விஷு புண்ணியகாலம் வெள்ளி இரவு 12-53 முதல் சனி காலை 9-53 வரை.

,, 7 வெள்ளி நடேஷரபிஷேகம் : நண்பகல் அபிஷேகம். தரிசன காலம் மாலை.

,, 9 ஞாயிறு ஸ்மார்த்த ஏகாதசி : இது வைஷ்ணவரல்லாதவர் விஷ்ணுவைக்குறித்து அனுஷ்டிக்கும் விரதம்.

,, 10 திங்கள் வைஷ்ணவ ஏகாதசி : இது வைஷ்ணவசமயத்தார் விஷ்ணுவைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதம்.

,, 11 செவ் பிரதோஷவிரதம் : இது சிவனுக்குரிய விரதமாகும்

,, 13 வியாழ அமாவாசைவிரதம் : இது பிதுர்தர்ப்பணம் செய்வதற்குரிய விரதமாகும்.

,, 15 சனி கார்த்திகை விரதம் : இது சுப்பிரமணியருக்குரியவிரதமாகும்.

,, 16 ஞாயிறு அக்ஷயதிருதியை, பரசுராமஜயந்தி, திரேதாயுகாதி

,, 17 திங்கள் சதுர்த்திவிரதம் : இது விநாயகப்பெருமானுக்குரிய விரதமாகும்.

,, 19 புதன் ஷஷ்டிவிரதம் : இது சுப்பிரமணியருக்குரிய விரதமாகும்.

,, 24 திங்கள் ஏகாதசிவிரதம் : இது விஷ்ணுவைக்குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும்.

,, 26 புதன் இது சிவனுக்குரிய விரதமாகும்.

,, 27 வியாழ சித்திரைச்சித்திரை, நரசிங்கஜயந்தி

,, 28 வெள்ளி சித்திராபூரணைவிரதம், சித்திரகுப்தவிரதம், அர்த்தநாரீசுரவிரதம்

பூரணை விரதம் : பிதுர்தர்ப்பணம் செய்வதற்குரிய விரதம்.

சித்திரகுப்தவிரதம் : இது சித்திரபுத்திரநாயனரைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். அன்று கோயில்களில் நீராகாரம் செய்வதற்குரிய தினமாகும்.

---

விடாமுயற்சியோடு எவன் உழைக்கிருனே அவனே உயிருடன் வாழ்பவன் எனலாம் "எனது பலவீனம் காரணமாக பலமுறை நாம் தவறலாம். ஆனல் என் நம்பிக்கையை இழக்கமாட்டேன்; என்றைக்காவது ஒருநாள் பரிசுத்தவானுக விளங்கமுடியும் என்ற நம்பிக்கையுடனேயே வேலைசெய்து வருவேன்" என்ருர் மகாத்மாகாந்தி

## சுபதினங்கள்

### விவாகப் பதிவுசெய்தல், திருமங்கலியத்துக்குப் பொன்னுருக்கல்

சித்திரை 17 திங்கள் முன்னிரவு 6-07 முதல் 7-09 வரை
,, 19 புதன் காலை 6-49 முதல் 8-40 வரை
,, ,, ,, பகல் 8-52 முதல் 10-50 வரை
,, ,, வியாழன் காலை 6-36 முதல் 8-35 வரை
,, ,, ,, பகல் 8-47 முதல் 10-46 வரை
,, ,, ,, மாலை 5-04 முதல் 6-56 வரை
,, ,, திங்கள் காலை 6-29 முதல் 7-19 வரை
,, ,, ,, பகல் 9-05 முதல் 10-30 வரை
,, 27 வியாழன் காலை 6-16 முதல் 7-38 வரை

### விவாகம்

சித்திரை 10 திங்கள் இரவு 2-02 முதல் 3-35 வரை லக்கினம் : கும்பம்
,, 16 ஞாயிறு பகல் 7-00 முதல் 8-51 வரை ,, இடபம்
,, ,, ஞாயிறு மு. இ, 9-03 முதல் 11-02 வரை ,, மிதுனம்
,, 17 திங்கள் இரவு 6-08 முதல் 7-09 வரை ,, துலாம்
,, 24 திங்கள் காலை 6-29 முதல் 7-19 வரை ,, இடபம்
,, ,, ,, பகல் 9-05 முதல் 10-30 வரை ,, மிதுனம்
,, 29 சனி பி, இ. 12-49 முதல் 2-22 வரை ,, கும்பம்
,, ,, ,, ,, ,, 2-34 முதல் 4-04 வரை ,, மீனம்

### வீடுகட்டுதல் குடிபுகுதல்

சித்திரை 19 புதன் பகல் 6-49 முதல் 8-40 வரை லக்கினம் : இடபம், திக்கு : வடமேற்கு, விபரம் : கட்ட, புக.

சித்திரை 20 வியாழன் பகல் 6-36 — 8-35 லக்கினம் : இடபம்' திக்கு வடமேற்கு, விபரம் : கட்ட, புக.

சித்திரை 20 வியாழன் பகல் 8-47 — 10-46 லக்கினம் : மிதுனம் திக்கு : வளமேற்கு, விபரம் : கட்ட, புக.

சித்திரை 20 வியாழன் மு. இ. 7-08 — 9-07 லக்கினம் : விருச்சிகம் திக்கு : வடமேற்கு, விபரம் : கட்ட, புக.

### தேவப்பிரதிஷ்டை

சித்திரை 19 புதன் பகல் 6-49 — 8-46 லக்கினம் : இடபம்
,, 20 வியாழன் காலை 6-36 – 8-35 ,, இடபம்.
,, 20 வியாழன் பகல் 8-47 — 10-46 ,, மிதுனம்

# சித்தார்த்திவருஷ வருஷப்பிறப்புக் கருமம்

கலியுகாதி சுத்ததினம் 18,55,511 நாடி 56, விநாடி 58. தற்பரை 45-க்குச் சரியான கால யுத்திஷூ பங்குனிமீ 30 உ (14-4-1979) வெள்ளிக்கிழமை பின்னிரவு நாடி 56. விநாடி 59 (மணி 4-53) ல் அபரபக்ஷதுதியைத் திதியில் சுவாதி நக்ஷத்திரத்தின் 4-ம் பாதத்தின் வச்கிர நாமயோகத்தில், தைதிலக் கரணத்தில் மீனலக்கினத்தில், கன்னி நவாம்மிசத்தில், புதன் காலவோரையில், சனி சூக்குமவோரையில் இராக்ஷதகுணவேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய காகம் துயிற்றெழிலும். சூக்குமபக்ஷி நடைத்தொழிலும் செய்யுங்காலத்தில் இப் புதிய சித்திரார்த்தி வருஷம் பிறக்கின்றது. அன்று பின்னிரவு நாடி 46 விநாடி 59 (மணி 12-53) சித்தார்த்திஷூ சித்ரைமீ 1உ சனிக்கிழமை பகல் நாடி 6. விநாடி 59 (மணி 8-52) வரை விஷுபுண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காத்தில் யாவரும் சங்கற்பித்து *மருத்துநீர்தேய்த்து சிரசில் கொன்றையிலையும், காலில் புங்கிலையும் வைத்து §ஸ்நானஞ்செய்து சிவப்புக்கரை கறுப்புக்கரை அமைந்த பட்டாடையாயினும், ஆடையாயினும் உடுத்து வைரம் நீலம் வெள்ளை என்பவற்றால் ஆய ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விநாயகர் முதலிய குலதெய்வங்களை பூசித்து, இயன்ற தானதருமங்கள் செய்து, குரு பெற்றோர் முதலிய பெரியோரைவணங்கி அவர்களின் ஆசீர்வாதம்பெற்று, பந்துமித்திரர்களுடன் அளவளாவி அறுசுவையமைந்த உண்டிகளுடன் கடுகு புளி எள் நெல்லிக்கனி என்பவை சேர்த்தருந்தி சுகந்த வாசனைத் திரவியம சந்தனம் புஷ்பம் அணிந்து தாம்பூலந்தரித்து கண்ணாடியில் முகதரிசனம் செய்து புதுவருஷப் பலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்தும் மங்களகரமாகச் சயனித்து மறுநாளாகிய சித்தார்த்திவருஷ சித்திரைமீ 1உ சனிக்கிழமை காலையில் எழுந்து நித்திய நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துத் தத்தம் வீடுகளில் சூரியனுக்குப்பொங்கல் பூஜை வழிபாடுகள்செய்து முன்போல போசன பூஷனதரிசனாதிகள் செய்து மங்களகரமாக வாழக்கடவர்.

*மருத்துநீர் :- தாழம்பூ, தாமரைப்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளைச் சுத்தஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொள்க.

§ சங்கிரமதோஷ நக்ஷத்திரங்கள் :- திருவாதிரை சித்திரை, 3, 4-ம் கால்கள், சுவாதி விசாகம் 1, 2 3-ம் கால்கள், சதயம், பூரட்டாதி 4-ம் கால் உத்தரட்டாதி, ரேவதி இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம்செய்து தானதருமம், தேவபூஜை சிறப்பாகச்செய்து சங்கிரமதோஷத்தை நிவர்த்திசெய்யக்கடவர்.

### குருசாரபலன்

குரு வருஷாதியாக ஆவணிமீ 6உ வரையும் கர்க்கடகராசியில் இருத்தலால் அக்காலத்திலே நல்ல மழையும், பயிர்ச்செழிப்பும், பசுக்களுக்குப் பால்விருத்தியும், கர்ப்பஸ்திரீகள் மிகுதியாக ஆண்குழந்தை பெறுதலும், இராசகலகங்களுமுண்டாம். ஆவணிமீ 7உ முதல் வருடாந்தம் வரையும் சிங்கராசியில் இருத்தலால் அக்காலத்தில் பிரஜைகளுக்குப் பயங்கரமும், பசியும், பெரும்நோயும் பஞ்சமுமுண்டாம்.

### சனிசசாரபலன்

சனி வருஷாதியாகக கார்த்திகைமீ 13உ வரையும் சிங்கராசியினும், கார்த்திகை 14உ முதல் மாசிமீ 6உ வரையும் கன்னிராசியிலும், மாசிமீ 7உ முதல் வருடாந்தம் வரையும் சிங்கராசியிலும் நிற்பர். இதில் வருஷாதியாக ஐப்பசி 2உ வரையும், பங்குனி 20உ முதல் வருடாந்தம் வரையும் பூரத்தில் நிற்கையால் மழைக்குறைவும், பஞ்சமும், நோயும் ஜனங்களுக்குக் கேடுமுண்டாம். ஐப்பசிமீ 3உ முதல் பங்குனிமீ 19உ வரையும் உத்தரத்தில் நிற்கையால் அற்ப மழையும் எள்ளுப் பயறு விளைவு மிகுதியுமுண்டாம்.

**சோதிடம்: 1**

# வானசாஸ்திரப்பகுதி

13. நக்ஷத்திரங்களெல்லாவற்றின் சரித்திரத்தில் வெண்படலங்கள் பூர்வநிலையைக் காட்டுகின்றன. அகிலாண்டத்துள்ள சகல வானசோதிகளும் பற்பல சுற்று கட்கூட்டமேயென்று அனுமானிக்கப்படுகின்றது. சுற்றுகள்களின் அடர்த்திக்கேற்றவாறு வானசோதிகளும் பல்வேறுவகைத் தோற்றமுடையனவாயிருக்கின்றன. கவர்ச்சிச் சக்தியால் வானசோதிகளின் துகள்கள் சலனப்பட்டு ஒன்றோடொன்று மோதிக்கொள்ள அதனால் சூடும் ஒளியும் உண்டாகின்றது. சுயவொளியுள்ள வானசோதிகளெல்லாம் அடர்த்தியான துகளணுக்களின் சலனத்தினால் ஒளி கொடுக்கின்றன. வெண்படலங்கள், நெருக்கமின்றிச் சிதறிப் பரந்ததுகட்கூட்டங்களானமைக்கப்பட்டிருத்தலின் அவற்றின் சுய சலனங்கள் அற்பமாயும் ஒளி மங்கியதாயுமிருக்கின்றது. மேற்குறித்த துகட்கூட்டங்கள் அடர்ந்து அடர்ந்து செறிதலினால் சலனம்விரைவாக்கப்பட்டு உஷ்ணமும் ஒளியும் அதிகரித்துப் பலதிறப்பட்ட நிலைகளையுடைய நக்ஷத்திரங்கள் உண்டாகின்றன.

வால்வெள்ளிகள். அமைப்பில் மேற்குறித்த வெண்படலங்களையும் சில நக்ஷத்திரங்களையும் போன்றவை. வால்வெள்ளிகளுக்கும் அவற்றிற்குமுள்ள வேறுபாடு அவைகள் அதிதூரத்திலிருப்ப, வால்வெள்ளிகள் நமது சூரியனைச்சுற்றிக்கொண்டிருப்பதேயாம். அன்றியும், வால்வெள்ளிகள் அதிதூரத்திலிருந்து சூரியனைச் சமீபித்து வந்து மீட்டும் அதிகதூரத்துக்குச் சென்றுவிடுவதால் நாம் அவைகளைச் சமீபத்தில் செல்லும்போது மாத்திரம் காண்கிறோம்.

14. வானசாஸ்திரத்தில் விளக்கப்படும் வானசோதிகளுள் முக்கியமான பிரிவுகள் மேலே கூறப்பட்டன. வானசாஸ்திரிகள் மேற்கூறிய வானசோதிகளின் தோற்றத்தையறிதலோடுமாத்திரம் திருப்தியடைந்துவிடவில்லை. அவர்கள் அவைகளின் பரிமாணம் நிறை முதலியவற்றையுமாராய்ந்து அவ்வவற்றின் இருப்பிடங்களையுங் கணித்திருக்கின்றனர். இப்படியாராய்ந்ததில், சூரியன் பூமியைப்போல 13,05,000 மடங்கு பெரிதானதென்றும், பூமி சந்திரனைப்போல் 50 மடங்கு பெரியதென்றும், கண்டிருக்கிறார்கள். அத்துடன், பூமியிலுள்ள நாம் சூரியனைச் சுற்றிவருகையில் சந்திரன் இப்பூமியை அதிசமீபமான தூரத்தில் சுற்றிக்கொண்டிருப்பதாக அறிந்திருக்கிறார்கள். பூமி சூரியனைச் சுமார் 9 கோடியே 30 லட்சம் மைல் தூரத்தில் சுற்றிக்கொண்டிருக்கையில், சந்திரன் பூமியை 2,38,840 மைல் தூரத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றது.

15. ஆகவே, சூரியனின் பெரிய உருவம் அதனுடைய மிருந்த தூரத்தினால் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதை அறிகிறோம். இதனால் தூரத்திலுள்ள பெரிய சூரியன் சமீபத்துள்ள சிறிய சந்திரனினளவாகத் தோற்றுகின்றது.

---

**வெளிநாடுகளில்**

**விநாயகருக்கு வழங்கும் பெயர்கள்**

பர்மாவில் 'மகாபிணி' எனவும், மங்கோலியாவில் 'தோத்கார்' எனவும், 'அபுன்காகபம்' எனவும், திபெத்தில் 'த்சோக்ப்ராக்' எனவும், கம்போடியாவில் 'பிராக் கணேஷ்' எனவும், சீனாவில் 'க்வான் ஷிடியிக்' எனவும், ஜப்பானில் 'விநாயக்ஷா' எனவும் அழைக்கப்படுகிறார் பிள்ளையாராகிய நம் விநாயகர். இந்தோனேஷியாவிலும் விநாயக வழிபாடு உண்டு. பௌத்த புராணத்தில் விநாயகரை 'ஞானதேவன்' என்று போற்றப்படுகின்றது.

**கோசரபலன் :**

# சித்தார்த்திவருடம் சித்திரைமாதம்

## இலங்கைக்குப் பலன்

இம்மாதம் சூடு அதிகம், வெப்புநோய்கள் ஆரம்பிக்கும், மாத இறுதியில் அற்ப மழை காற்றுக்குழப்பம் உண்டு, எள்ளு, உழுந்து, பயறு, தேங்காய் தேங்காய்ப் பிண்ணுக்கு, எள்ளுப்பிண்ணுக்கு விலை யிறங்கும். மிளகாய், வெங்காயம், மல்லி விலையேறும். அரிசி, நெல், வைக்கோல் விறகு, பழவகை காய்கறி, மீன் கடை, யந்திர சாதனம், பட்டு விலையிறங்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் சுமுகமாகும், மாத முடிவில் எதிர்கட்சிகளால் அரசாங்கத்திற்குப் பலதடைகள் ஏற்படும். வைத்தியர், தரணிகள், தரகர், ஆசிரியர்கள், நாதஸ்வரவாத்தியக்காரர், வியாபாரிகள் நற்பலன் உறுவர், அடிமைகள், கூலியாட்கள், மிருகங்கள், கஷ்டமுறுவர். சோதிடர், விசேட பலன்பெறுவர். யந்திரபாவனைகள் குறையும், நடுத்தர வர்த்தகத்தினர் பொதுவாகக் கஷ்டமுறுவர், வெளிநாட்டிலிருந்து பிரபலம் வாய்ந்த அரசியல்வாதி ஒருவர் வருவார்- உள்நாட்டிற்குப் பிரச்சினைகளுக்கும், வியாபாரம் சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தைகள் நிகழும்;

## பன்னிரு இராசிகளும் அவற்றின் பலன்களும்

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் கால்கள்

இடையிடையே உஷ்ணவியாதியால் பீடிக்கப்படுதல், தனது வேலைசம்பந்தமாக இடம் பெயர்தல், தன்னுடைய அதிகாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் சில சம்பவங்கள் நிகழுதல், நண்பர்களோடு விபரீதமான விளக்கத்தினால் சில சிறு சச்சரவுகள், எதிர்பாராத செலவுகள், தனது நற்பெயருக்குப் பழுது வராமற் பாதுகாப்பதில் வெற்றியடைதல், எனினும் வீண்சிரமப்படுதல், சுற்றத்தவர்களினால் சில பிரச்சினைகள் எழுதல், அவை பொருட்செலவோடு நீங்குதல், 17ம் தேதியின் பின் தேகசுகக்குறைவு நீங்கி சுகமடையலாம் 7ம் 8ம் 18ம் தேதிகள் சுப பலனுக்குரியநாள்களாகும் இக்காலங்களில் விவாகம், உத்தியோகஉயர்வு, பிறநாட்டுப் பிரயாணம் என்பவற்றிற்கு அடியீடு செய்தல், முயலுதல் நற்பயனை அளிக்கும்,

### இடபம்

கார்த்திகை 2, 3, 4ம் கால்கள்,
ரோகிணி மிருகசீரிடம் 1, 2-ம் கால்கள்

எடுத்தகாரியங்கள் சில எதிர்பாராதவிதமாகத் தடைப்படுதல், வரவுக்கு மேற்பட்ட செலவு, இடையிடையே வாயுபீடை, அதனால் வைத்தியச்செலவு, இனசனங்களோடு வாக்குக்கலகம், அதனால் சிறிது மனக்கவலை எதிர்பாராதவிதமாகச் சந்தோஷச்செய்தி கிடைத்தல், மங்கல நிகழ்ச்சிகள் நிகழுதல், தாமதமடைந்த காரியங்கள் நிறைவேறுதல் உண்டாம். இவர்களுக்கு 8 ம் 9ம் 19ம் தேதிகள் நற்பலனுக்குரிய நாள்களாம். இக்காலங்களில் இவர்கள் பிரயாணம், இராஜதரிசனம், தெய்வவழிபாடு இவற்றில் ஈடுபடின் விசேட பலனுண்டாம். 24ம் தேதி இவர்களுக்குச் சுபபலனுக்குரிய காலமன்று. இந்நாளில் பிரயாணத்தைத் தவிர்க்கவும்

### மிதுனம்

மிருகசிரிடம் 3, 4-ம் கால்கள், திருவாதிரை,
புநர்பூசம், 1, 2, 3-ம் கால்கள்

இவர்களுக்கு நன்மை மென்மேலும் பெருகும் சந்தோஷமான காரியங்கள் நிகழும், மங்கலகாரியங்கள் நடைபெறும். வியாபாரம், தொழில் என்பனவற்றில் விசேட லாபம் உண்டாகும். உடலில் பிணிகள் இதுகாறும் வருத்தியவை நீங்கிச் சுகமுண்டாகும் பொருள்வரவு, எடுத்தகாரியங்களில் வெற்றி, மேன்மை, எதிர்பாராத விதமாக நடைபெறுமென்று எதிர்பார்த்த

தொன்று நடைபெறுது விடுதல், நண்பர்களினுல் சில அவமானத்துக்குரிய சம்பவங்கள் நிகழுதல், வாக்குக்கலகம் உண்டாதல், பணம் வந்து சேருதல் உண்டாம். இவர்களுக்கும் 7ம் 10ம் 21ம் தேதிகள் சுபலனுக்குரியவை. புதியதொழில் ஆரம்பித்தல், கட்டிடமுயற்சிகளுக்கு அடிகோலுதல், குடிமனைபுகுதல் முதலிய விடயங்களைச் செய்யில் நற்பலன் உண்டாகும். 12ம் தேதி சுபபலனுக்குரியதன்று அன்று முக்கியமான விடயங்களை நிறுத்தி வைத்தல் பலன் தரும்

## கடகம்

புநர்பூசம் 4ம் கால் பூசம் ஆயிலியம்

எடுத்த காரியங்களில் விசேடவெற்றி, எதிர்பார்த்ததற்கு மேலாக லாபமடைதல், இடையிடையே சுகவீனம், தேகமெலிவு, செலவு அதிகரித்தல், பிரயாணக்கஷ்டம், எதிர்பாராத சில சம்பவங்கள் நிகழுதல், பொருள்வரவு, புண்ணியத்தலங்களில் கடவுள் வழிபாடு, தருமச்செலவு, சுற்றத்தவர்கள் சிலருடன் பிழையான விளக்கத்தினுல் வாக்குக்கலகம், மனமுறிவு, வீட்டில் சந்தோஷத்துக்குரிய சம்பவங்கள் நிகழுதல் என்பன உண்டாம்; இவர்களுக்கு 10ம் 11ம் 21ம் தேதிகள் விசேட பலனைக்கொடுக்கும்இககாலங்களில் அரசாங்கவேலைகளுக்கு நேர்முகப் பரீட்சைக்குச் செல்லுதல், தேர்வுக்குத்தோற்றுதல். விவாகவிடயங்களுக்கு அடிகோலுதல் நல்ல பலனைக் கொடுக்கும். 14ம் தேதி இவர்களுக்குச் சுபபலனுக்குரிய நாளன்று. அன்று முக்கியமான விடயங்களைத் தவிர்த்தல் நன்று.

## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ம் கால்

தனது நிலையிலிருந்து மாறுதல், இடமாற்றம், அதிகாரக்குறைப்பு, எதிர்பாராத சில சம்பவங்கள் நிகழுதல், இடையிடையே அற்ப சுகவீனம், வாயுபீடை, பொருட்செலவு, கஷ்டம், இனசனக்கொண்டாட்டம் கணவனுயின் மனைவிக்கும் மனைவியானுல் கணவனுக்கும் பரஸ்பர நன்மை உண்டாதல். விசேடமங்கல காரியங்கள் நிறைவேறுதல், பிரயாணஞ்செய்தல், இடையிடையே சில துக்கமான செய்திகள் கேள்விப்படுதல், அக்கினிஆயுதபயம், என்பன உண்டாம். இவர்களுக்கு 10, 11, 22-ம் தேதிகள் விசேடபலனுக்குரிய நாள்களாகும் இந்நாள்களில் வியாபாரம், பிரயாணம், மங்கலகாரிய ஆரம்பம் இவற்றைச் செய்தால் விசேட பலனைப்பெறுவர். 14ம் தேதி சுபபலனுக்குரிய நாளன்று. அன்று பிரயாண, யந்திரவேலை இவற்றை நிறுத்துக.

## கன்னி

உத்தரம் 2, 3, 4-ம் கால்கள், அத்தம்
சித்திரை 1, 2 ம் கால்கள்

இடையிடையே உஷ்ணரோகப்பீடித்தல், அதனுல் பொருட்செலவு, மனநிறைக் குறைவு, தொழிலில் எதிர்பார்த்ததிலும் லாபம்குறைவு, வைத்தியச்செலவு, இனசனங்களினுல் உதவிபெறுதல், தூரதேச நண்பர் ஒருவரால் நற்பலன், இலாபம் நண்பர்களினுல் சகாயம் பெண்களினுல் வாக்குக்கலகம், அவர்களினுல் சில எதிர்பாராத சிக்கல்களில் மாட்டுப்படுதல், கணவனுனுல் மனைவிக்கும் மனைவியானுல் கணவனுக்கும் நற்பலனின்மை, காதல்விவகாரத்தில் தோல்வி மாதபிற்பகுதியில் பொருள்வரவு அதிகரித்தல், தனதானியலாபம் வாக்குக்கலகத்தினுல் நட்டம் உண்டாம். இவர்களுக்கு 11 ம் 12ம் 23ம் தேதிகள் விசேடபலனுக்குரியனவாம். இக்காலங்களில் விவாகம், உத்தியோகம் பிரயாணம் இவற்றிற்குரிய காரியங்களில் ஈடுபட்டால் விசேடபலன் உண்டாகும். 27ம் நாள் இவர்களுக்குச் சுபபலனுக்குரியதல்ல. இந்நாளில் முக்கியவிடயங்களைத் தவிர்க்குக.

## துலாம்

சித்திரை 3, 4-ம் கால்கள், சுவாதி,
விசாகம் 1, 2, 3-ம் கால்கள்

எதிர்காலத்தில் என்ன நிகழுமோ என்ற பயம், எதிர்பார்த்த விடயங்கள் தடையுற்று நிகழாதொழிதல், வாயுபீடை, மார்பிலும் வயிற்றிலும் நோவு, ஆயுதபயம், எதிர்பாராத சில லாபமான காரியங்கள் நிறைவேறுதல், மாதப்பிற்பகுதியில், முன்ஏற்பட்டநோய்கள் குணமடைதல், சந்தோஷம் தனதுபலம் குன்றுதல், வாக்குக்கலகம், கவலையடைதல், இடமாற்றம் அலைச்சல், மாதஇறுதியில் பணவரவு, அதிகாரம், சம்பத்து உண்டாம். இவர்களுக்கு 12ம் 13ம்

24ம் நாள்கள் சுபபலனுக்குரிய நாள்களா குக். இந்நாள்களில் பிரயாணம், உத்தி யோகத்துக்கு அடிகோலுதல், வியாபாரத் தில் புதுமுயற்சிகள் ஆரம்பித்தல், விசேட பலனைக்கொடுக்கும். 16ம் தேதி சுபபல னுக்குரியதன்று. அன்று விசேட கருமங்களை விட்டு ஓய்வு பெறுதல் நல்லது.

## விருச்சிகம்

விசாகம், 4ம் கால், அனுஷம், கேட்டை

அனுகூலம், எடுத்த காரியங்களுக்கு நண் பர் சுற்றத்தாரிடமிருந்து விசேட உதவி கிடைத்தல். இடையிடையே வாயுபீடை, ரோகம், அதனால் பணக்கஷ்டம், இலட் சுமீகரம், மாதஇறுதியில் ஏற்பட்ட நோய் கள் குணமடைதல, தான்செய்யாத சில விடயங்களுக்காகப் பழிச்சொற் கேட்டல், அதனால் மசலவு, சிலரோடு வீண் மனக் குரோதம், காய்ச்சல், முயற்சியில் எதிர் பார்த்ததிலும் அதிகலாபம் பெறுதல், மேன்மை, எல்லாரிடமும் புகழ்கூரார்த்தை பெறுதல், அதிகாரம், சம்பத்து திரவிய லாபம், வெற்றிஉண்டாகும். இவர்களுக்கும் 12ம் 18ம் 26ம் தேதி நற்பலனைக் கொடுக் கும். 29ம் தேதி சுபபலனுக்குரியதன்று. நல்ல பலனுக்குரிய மூன்று தேதிகளிலும், விவாகம், பிரயாணம், கடன், விவகாரம், அரசதரிசனம், செய்ய விசேடபலன் உண்டு. 29-ம் தேதியை ஓய்வு நாளாகக்கொள்க,

## தனு

மூலம், பூராடம், உத்தராடம், 1ம் கால்கள்

இடையிடையே உஷ்ணரோகம், அத னால் வைத்தியச்செலவு, கவலையடைதல், தனது அதிகாரத்தில் குறைப்பு ஏற்படுதல், நிலைமாற்றம், வாக்குக்கலகம், எடுத்தகாரி யங்கள் தடைப்படுதல் மாதப்பிற்பகுதியில் பணவரவு, அதிகலாபம், காரியங்கள் வெற்றிபெறுதல், இனசனக்கொண்டாட் டம், மங்கலகாரியங்கள் வீட்டில் நடைபெ றுதல், காதல்விவகாரங்களில் வெற்றி, கணவன்-மனைவி உறவு விருத்தி உடற்சுகம், இன்பமான விடயங்களிற் பொழுதுபோக்கு. எதிர்பாராத ஒரு சம்பவத்தினுல் மனக் கவலையடைதல், மனச்சிதைவுறுதல், சந் தோஷம், மாதமுடிவிற் குடும்பக்கலகம் உண்டாம். இவர்களுக்கு 13, 14ம் 27ம் தேதிகள் சுபபலனுக்குரியனவாம். இக்காலங் களில் இவர்கள் புதுமுயற்சி, கல்விச்சித்தி பிரயாணம், விவாகம், முதலியவற்றில் ஈடு படில் விசேடநன்மை உண்டு. 16ம் நாள் சுபபலனுக்குரியதன்று. அன்று முக்கியவிட யங்களை விலக்குக.

## மகரம்

உத்தராடம் 2, 3, 4ம் கால்கள் திருவோணம் அவிட்டம் 1, 2.ம் கால்கள்

ரோகம், கலகம், இனசனங்களிடையே வீண்வாக்குவாதம், வைத்தியச்செலவு அதி கரித்தல், காய்ச்சல், எதிர்பாராத சம்பவங் கள் நிகழுதல் மனக்கவலை, மாதத்தின் பிற்பகுதியில் திரவியலாபம், எடுத்தகாரியங்களில் பூரணவெற்றி, தன தானியலாபம், தனதுபதவிக்கு மேற்பட்ட அதிகாரங்களைப் பெறுதல், காதல்விவகாரங் களில் வெற்றி, குடும்பச்சுகம், வீட்டில்மங் கல காரியங்கள் நடைபெறுதல் இன்ப மான பொழுதுபோக்குகள், மாதமுடிவில் சுகம் நன்மை, அயலார் நன்மதிப்பு, தூர தேச பந்துவினுல் நன்மை உண்டாம். இவர் களுக்கு 15, 17, 28ம் தேதிகள் சுபபல னுக்குரிய நாள்களாம். இந்நாட்களில் கொள்ளல் விற்றல், புதியவியாபாரத் தொ டர்பு, பிரதானமாணவர்களைச்சந்தித்தல், தேர்வுக்குத் தோன்றுதல் செய்யின் விசேட பலனுண்டாகும். 19ம் தேதி சுபபலனுக் குரியதன்று.

## கும்பம்

. அவிட்டம், 3, 4-ம் கால்கள், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் கால்கள்

உடற்சுகம், திருப்தியாயிருத்தல், கீர்த்தி, மேன்மை, விசேடகாரியங்கள் நிகழுதல், இடையருமுயற்சி, எனினும் முயற்சிக்கேற்ற பலன் கிடைத்தல் அரிது, கஷ்டம், இட மாற்றம், மாதமுடிவில் பணவரவு, விசேட லாபம், மனமகிழ்ச்சி, உண்டாகும்; அந்நிய ராசி சகாயம், வைத்தியர் உதவிபெறுதல், மேன்மை. பிரயாணக்கஷ்டம், தெய்வானு கூலம்; தருமச்செலவு, அதிகாரம், நித்தி ரைக்குழப்பம், உண்டாம். இவர்களுக்கு 15, 16, 28-ம் தேதிகள் விசேட பலனுக்குரிய நாள்களாம். இக்காலங் களில் பிரயாணம், வழக்கு, வைத்தி யம், உத்தியோகம், விவாகம் சம்பந்தமான

( தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க )

# விவாக விஷயமும் ஜாதகப் பொருத்தமும்

சு. அ.- சுப்பிரமணியக்குருக்கள் — கோண்டாவில்.

*(1)*

**29-10-40-ல்**

கும்பகோணத்தில் பிறந்த ஒரு பெண்ணின் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| கேது | குரு சனி | | |
| | இராசி | | |
| | | | |
| | | லக். சூ சந் புத | செவ் சுக் ராகு |

*(2)*

**20-11.1915-ல்**

செகந்திராபாத்தில் இரவு 9-30 மணிக்கு பிறந்த ஒரு பெண்ணின் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ல· சனி |
| | இராசி | | செவ் கேது |
| ராகு | | | |
| | சூரிய சுக் | புத | |

*(3)*

**10-1-1940-ல்** பிறந்த ஒரு பெண்ணின் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| செவ் குரு | சனி கேது | | |
| | இராசி | | |
| சந் சுக் | | | லக் |
| சூரிய புத | | ராகு | |

*(1)* இந்தப் பெண்ணுக்குக் கல்யாணமான ஒருவருடத்திற்குள் புருஷனை இழக்கும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டது. இந்த ஜாதகத்தில் மேலே கூறிய யோகம் இருப்பதைக் காணலாம்; வைதவ்ய யோகத்துடன் இன்னும் பலவிதமான துர்ப்பாக்கிய யோகங்கள் இருப்பதைக் கவனிக்கவேண்டும். குடும்பாதிபதி விரயத்தில் இருப்பதும், சுகஸ்தானாதிபதியும், பஞ்சமஸ்தானாதிபதியும் நீசமாய் ஸப்தமத்தில் நிற்பதும் அஷ்டமாதிபதி நீசதானம் பெற்றிருப்பதும் தர்மஸ்தானாதிபதியான புதன் அஸ்தாங்கத தோஷத்தை அடைந்ததும் கவனிக்கவேண்டியது, மேலும் துலா லக்கினத்திற்குப் பாதகாதிபதியான சூரியன் லக்கினத்தில், லக்கின பாகையில் நின்றும் துலா லக்கினத்திற்கு அதிஉன்னத ராஜயோககாரகனான சனியால் பார்க்கப்படுவதால் சூரியன் பெரும் பாதகமான வைதவ்யத்தைக் கொடுத்தான். இந்தப்பெண்ணுக்கு ஜனனகாலத்தில் செவ்வாய் திசை 3 வருஷம் 6 நாள் பாக்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த வைதவ்ய யோகமானது 21-4-1959-ல் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. அப்படியானால் ராகு திசையில் சந்திரபுத்தியின் ஆரம்பத்தில் இந்தத் துர்ப்பாக்கியம் ஏற்பட்டது- ராகு

மோக்ஷ ஸ்தானத்தில் கன்யா ராசியில் இருக்கிறார். கன்னிக்கு 7ம் பெரிய விரயம். வைதவ்யம், சந்திரன் கர்மஸ்தானாதிபதியாகிறான். ஆகவே ராகுதெசை சந்திரபுத்தியில் இது ஏற்பட்டது. ஏன் சூரியபுத்தியில் ஏற்படவில்லை என்றால் சூரியனும் சனியும் பரஸ்பரம் பார்வை பெற்று இருப்பதால் சூரியபுத்தியில் ஏற்படாமல் சந்திரபுத்தியில் ஏற்பட்டது தக்கோர் இந்த ஜாதகத்தை ஆராய்ந்து கொள்வார்களாக.

(2) குரூர கிரகம் நீசமடைந்தும், இக்குரூர கிரகமிருக்கும் ராசிநாதன் சுபாம்ஸத்தில் அல்லாமலும் சுபர் பார்வையில்லாமலும் சம்பந்தமில்லாமலுந் இருக்குமானால் அப்பெண் விதவையாவாள்,

20-11-1915 ல் செகந்திராபாத்தில் இரவு 9-30 மணிக்குப் பிறந்த ஒரு பெண்ணின் ஜாதகம்- இந்த ஜாதகத்தில் குரு ராகிரகமான செவ்வாய் நீசம் அடைந்தும் ராசிநாதனான சந்திரன் மீனதில் நின்று சுபர் பார்வையும் சேர்க்கையில்லாமலும் சனியாலும் ராகுவாலும் பார்க்கப்பட்டும் இருப்பது கவனிக்கத்தக்கது. இங்கும் குடும்பஸ்தானம் மிகவும் கெட்டுவிட்டதைக் கவனிக்கவேண்டும். செவ்வாய், கேது, குரு ஆகிய முதல்தரமான பாபக்கிரகங்கள் இருப்பதும், இந்த குடும்பஸ்தானம் களத்திர ஸ்தானத்துக்கு ஆயுஸ்தானமாக ஆவதும் செவ்வாய் ஆயுதங்கள், எந்திரங்கள் போன்றவைகளுக்கு காரகனாவதும் ராகு-கேதுக்கள் பயங்கரமான ஏற்றத் தாழ்வுகளுக்கு ஆதிபத்தியம் செலுத்துவதையும், சத்துருஸ்தானத்தில் சூரியனும் சுக்கிரனும் அடசரர்சியான தேளில் கலந்துநிற்பதும் கவனிக்கையில் இந்தப்பெண் விவாகமான மறுநாளே விதவையானாள் என்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை சூரியனும் சுக்கிரனும் சம்பந்தப்பட்டதாலும் லக்கினத்தில் சனி நின்று குருவால் பார்க்கப்படுவதாலும், புத்திஸ்தானமான துலாராசியில் புதன் நிற்பதாலும் இந்தப்பெண் உலகவாழ்க்கையை நீத்து ஆத்மமார்க்கமான வாழ்க்கையில் ஈடுபடுவாளானால் மிகவும் சாந்தியை அடைவதுடன் இந்தப் பெருந்துக்கத்தை மறக்கவும் ஏதுவாகும்.

(3) ராகுவானவர் சனியுடனும் செவ்வாயுடனும் 7 அல்லது 8-ம் இடத்தில் நின்றால் விதவையாவாள்- 10-1-1940-ல் பிறந்த ஒரு பெண்ணின் ஜாதகம்.

இந்த ராசியில் 8-ம் பாவத்தில் செல்வாயும் குருவும், 9-ம் பாவத்தில் சனியும் கேதுவும், 5 ம் பாவத்தில் சூரியனும் புதனும் 6-ம் பாவத்தில் சந்திரனும் சுக்கிரனும் இருக்கின்றனர். கணவனாக வரிக்கப்பட்டவன் வியோகமடைந்தால இந்த ஜாதகத்திற்கு 4, 7, 8-க்கு உடையவர்கள் கூடி 8-லிருந்து பாவரால் பார்க்கப்பட்டாலும் (5) 12 ல் இருந்து 7-ம் இடத்தைப் பாவர் பார்த்தாலும் விதவையாவாள்- (6) செவ்வாய் 8-ம் இடத்தில் 8-ம் இடத்ததிபனோடு கூடியும் லக்கினம்சம் பாபக்ஷேத்திரத்திலும் அமைந்தால் விதவையாவாள்.

இன்னோரன்ன யோகங்களை நன்கு பராமரிக்கவேண்டும்- இப்படிப்பட்ட வைதவ்ய யோகம் இருக்கும் பெண் ஜாதகங்களைக் கவனித்து அவர்களை விவாகத்திலிருந்து பிரமசர்ய விரதத்தை அனுஷ்டிக்கும்படியும் நிஷ்காம காமங்கள் செய்துவரும்படியும் பகவத் பாகவத கைங்கரியங்களைப் புரிந்து வரும்படியும் யோசனை கூறுவது மிகப் பொருத்தமாகும்.

ஆண் ஜாதகங்களில் முதலில் நைஷ்டிக பிரம்மசர்ய விரதயோகமுள்ளதா என்றும் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

## இராசிபலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

காரியங்கள் செய்ய விசேடபலனுண்டாகும் 17ம் தேதியை முக்கிய விடயங்களுக்குவிலக்குக.

### மீனம்

பூரட்டாதி, 4 ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

எதிர்காலத்தில் யாது நிகழுமோ என்ற கவலை, வீண்வ்யயம், இடமாற்றம், அதிகார உயர்வு, அதிகாரிகளின் நன்மதிப்பு, விசேடலாபம், இலட்சுமிகரம், சுகம், செலவு, போகம், லாபம், காதல் விவகாரங்களில் வெற்றி, இன்பமான பொழுதுபோக்குகள், மனோரம்மியம், செலவு இடையிடையே அற்பநோய், இது மாதமுடிவில் நீக்கம்; தான் செய்யாத சில விடயங்களுக்காக அவமானமடைதல், திரவியலாபம். வெற்றி உண்டாம் இவர்களுக்கு 17, 18, 29-ம் தேதிகள் விசேடபலனுக்குரியவை, இந்நாள்களில் பரீட்சை, நேர்முகத்தில் சந்தித்தல் பிரயாண ஆரம்பம், விவாகம், கொடுக்கல் வாங்கல் இவற்றைச் செய்யில் விசேட பலன் கிடைக்கும். 20ம் தேதி சுபநாள் அன்று பிரதான காரியங்களைத் தவிர்க்கு க.

(1)

| | | | |
|---|---|---|---|
| | லக். சூரிய சனி | குரு புத சுக் கே | |
| | இராசி | | செவ் |
| சந் | | | |
| | ரா | | |

(2)

| | | | |
|---|---|---|---|
| | குரு | | |
| | இராசி | | ராகு |
| செவ் சூரி பு கே | | | |
| லக்- | சனி | | சந் |

(3)

| | | | |
|---|---|---|---|
| குரு | ரா | | |
| | இராசி | | |
| செ | | | சந் சுக் |
| | | லக், சூரிய புத கே | சனி |

(4)

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி | | லக், சந் செ ரா |
| கேது | | | புத சுக் |
| | | குரு | சுக் |

(5)

| | | | |
|---|---|---|---|
| சூரிய | சந் பு குரு ராகு | | செவ் |
| | இராசி | | |
| | | | லக். |
| சனி | | கேது | |

(6)

| | | | |
|---|---|---|---|
| | சந் செ குரு | சூரிய சுக் புத | லக். கேது |
| | இராசி | | சனி |
| | | | |
| ராகு | | | |

**5 உம் 6 உம் இரு மகான்களின் ஜாதகம்**

(தொடரும்)

# சந்திர பலனச் சக்கரம்

| சித்தார்த்தி ஸூ சித்திரை மீ முதல் | | | வரை | | | சந்திரராசி | ஜன்ம நக்ஷத்திர இராசிக்காரர்களுக்குச் சந்திரன் நிற்கும் ஸ்தானங்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | | ம. மி. | தேதி | | ம. மி. | | மேட | இடப | மிது | கர்க்கடக | சிங்க | கன் | துலா | விருச்சிக | தனு | மகர | கும்ப | மீன |
| 1 | கா | 6-05 | 1 | பிஇ | 4-57 | துலாம் | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 |
| 1 | பிஇ | 4-57 | 4 | முப | 10-00 | விருச்சிகம் | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 |
| 4 | முப | 10-00 | 6 | பிப | 1-18 | தனு | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 |
| 6 | பிப | 1-18 | 8 | பிப | 3-44 | மகரம் | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 |
| 8 | பிப | 3-44 | 10 | மாலை | 6-13 | கும்பம் | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 |
| 10 | மாலை | 6-13 | 12 | முஇ | 9-37 | மீனம் | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 12 | முஇ | 9-37 | 14 | பிஇ | 2-48 | மேடம் | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |
| 14 | பிஇ | 2-48 | 17 | முப | 10-07 | இடபம் | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 |
| 17 | முப | 10-07 | 19 | முஇ | 8-13 | மிதுனம் | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 |
| 19 | முஇ | 8-13 | 22 | முப | 7-40 | கடகம் | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 |
| 22 | முப | 7-40 | 24 | முஇ | 7-08 | சிங்கம் | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 |
| 24 | முஇ | 7-08 | 27 | பிஇ | 5-05 | கன்னி | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 |
| 27 | பிஇ | 5-05 | 29 | பிப | 12-41 | துலாம் | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 |
| 29 | பிப | 12-41 | 31 | மாலை | 5-57 | விருச்சிகம் | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 |
| 31 | மாலை | 5-57 | 31 | பிஇ | 5-53 | தனு | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 |

**சந்திரன், ஜன்மநக்ஷத்திரராசி முதலாக ஒவ்வொரு இராசிகளிலும் இருக்கும் பலன்.**

1-ல் போசனசயனசுகம், வஸ்திராபரணுதி அலங்காரம், களத்திரமித்திரமகிழ்ச்சி, விஷயபோகம்.
2-ல் அதிகசெலவு, அவமானம், காரியவிக்கினம், ஆயாசம், வாக்குக்கலகம்.
3-ல் தனலாபம், வஸ்திரலாபம், போசனசுகம், களத்திரமித்திரசுகம், நற்கீர்த்தி, ஜயம்.
4-ல் யாரிடத்திலும் நம்பிக்கைக்குறைவு, யோசனை, பந்துபீடை, தனநாசம்.
5-ல் தாழ்ந்தநிலை, மனக்குழப்பம், பிரயாணத்தடை, பணக்குறைவு, அசீரணரோகம், நடைக்கஷ்டம்.
6-ல் தனலாபம், தேகசௌக்கியம் சத்துருஜயம் விரும்பியபொருட்பேறு, மனமகிழ்ச்சி. [களத்திரசுகம்.
7-ல் போசனசயனசுகம், பொருட்பேறு, வாகனசௌக்கியம், மரியாதை, பந்துக்களுறவு, வஸ்திரலாபம்,
8-ல் மனப்பயம், பசி, வியாதி, எதிர்பாராத ஆபத்து, கலகம், பொருட்சேதம், தேகமெலிவு, மிருத்துபயம்.
9-ல் கட்டுப்படுதல், மனக்கவலை, பிரயாசமிகுதி, வயிற்றில்ரோகம், பொருட்சேதம், சத்துருபீடை, மானக்
10-ல் அதிகாரம், காரியனுகூலம், பெரியோர்சன்மானம், சந்தோஷம், நற்கீர்த்தி. [குறைவு.
11-ல் தனவிருத்தி, சினேகிதர்கொண்டாட்டம், சயனபோசனசுகம், களத்திரமகிழ்ச்சி, சுபசோபனம்.
12-ல் தனச்செலவு, தனதுசெய்கையினுற்கேடு, பிறர்க்குக்கீழ்ப்படுதல், சோம்பல், பொறுமை, குறைவு.

கவனிப்பு: விவாகாதி சகல சுபகருமங்களுக்கும், புதியகாரியந் தொடங்குதல், வியாச்சியந்தொடுத்தல், புதிய பொருள் கொள்ளல் விற்றல், பிரயாணம் முதலிய பல செய்கைகளுக்கும் சந்திரபலம் சுபமாயிருத்தல் அவசியமாகும். இதனைக்கவனித்து நடப்போர் பலனுறுதல் திண்ணம்.

# உதயலக்கினம் காணும் வழி (யாழ்ப்பாணம்) சித்திரை மீ 1 - 31 வ

| தமிழ்த் திகதி | மேடம் மமி மு | மேடம் மமி வ | இடபம் மமி வ | மிதுனம் மமி வ | கடகம் மமி வ | சிங்கம் மமி வ | கன்னி மமி வ | துலாம் மமி வ | விருச்சிக மமி வ | தனு மமி வ | மகரம் மமி வ | கும்பம் மமி வ | மீனம் மமி முத |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6-05 கா | 7 55முப | 9-58முப | 12-09 நப | 2-17பிப | 4-17 பிப | 6-15 மா | 8 19முஇ | 1029முஇ | 12 37பிஇ | 2 33பிஇ | 4 18பிஇ | 6-00ஐ |
| 2 | 6-00 | 7-50 | 9-53 | 12-04 | 2-12 | 4-12 | 6-10 | 8-14 | 10-24 | 12-32 | 2-28 | 4-13 | 5 55 |
| 3 | 5-57 | 7-47 | 9-50 | 12-01 | 2-09 | 4-09 | 6-07 | 8-11 | 10-21 | 12 29நஇ | 2-25 | 4-10 | 5-52 |
| 4 | 5-53 வ | 7-43 | 9-46 | 11-57 | 2-05 | 4-05 | 6-03 | 8-07 | 10-17 | 12-25 | 2-21 | 4-06 | 5-48 |
| 5 | 5-49 | 7-39 | 9-42 | 11-53 | 2-01 | 4-01 | 5-59 | 8-03 | 10-13 | 12-21 | 2-17 | 4-02 | 5-44 |
| 6 | 5-44 | 7-34 | 9-37 | 11-48 | 1-56 | 3-56 | 5-54 | 7-58 | 10-08 | 12-16 | 2-12 | 3-57 | 5-39 |
| 7 | 5-40 | 7-30 | 9-33 | 11-44 | 1-52 | 3-52 | 5-50 | 7-54 | 10-04 | 12-12 | 2-08 | 3-53 | 5-35 |
| 8 | 5-36 | 7-26 | 9-29 | 11-40 | 1-48 | 3-48 | 5-46 | 7-50 | 10-00 | 12-08 | 2-04 | 3-49 | 5-31 |
| 9 | 5-31 | 7-21 | 9-24 | 11-35 | 1-43 | 3-43 | 5-41 | 7-45 | 9-55 | 12-03 | 1-59 | 3-41 | 5-26 |
| 10 | 5-28பிஇ | 7-18 | 9-21 | 11-32 | 1-40 | 3-40 | 5-38 | 7-42 | 9-52 | 12-00 | 1-56 | 3-41 | 5-23 |
| 11 | 5-24 | 7-14 | 9-17 | 11 28முப | 1-36 | 3-36 | 5-34 | 7-38 | 9-48 | 11-56 | 1-52 | 3-37 | 5-19பிஇ |
| 12 | 5-21 | 7-11 | 9-14 | 11-25 | 1-33 | 3 33 | 5-31 | 7-35 | 9-45 | 11-53 | 1-49 | 3-34 | 5-16 |
| 13 | 5-16 | 7-06 | 9-09 | 11-20 | 1-28 | 3-28 | 5-26 பிப | 7-30 | 9-40 | 11-48 | 1-44 | 3-29 | 5-11 |
| 14 | 5-13 | 7-03 | 9-06 | 11-17 | 1-25 | 3-25 | 5-23 | 7-27 | 9-37 | 11-45 | 1-41 | 3-26 | 5-08 |
| 15 | 5-08 | 6-58 | 9-01 | 11-12 | 1-20 | 3-20 | 5-18 | 7-22 | 9-32 | 11-40 | 1-36 | 3-21 | 5-03 |
| 16 | 5-03 | 6-53 | 8-56 | 11-07 | 1-15 | 3-15 | 5-13 | 7-17 | 9-27 | 11-35 | 1-31 | 3-16 | 4-58 |
| 17 | 5 01 | 6-51 | 8-54 | 11-05 | 1-13 | 3-13 | 5-11 | 7-15 | 9-25 | 11-33 | 1-29 | 3-14 | 4-56 |
| 18 | 4-56 | 6-46 | 8-49 | 11-00 | 1-08 | 3-08 | 5-06 | 7-10 | 9-20 | 1128முஇ | 1-24 | 3-09 | 4-51 |
| 19 | 4-53 | 6-43 | 8-46 | 10-57 | 1-05 | 3-05 | 5-03 | 7-07 | 9-17 | 11-25 | 1-21 | 3-06 | 4-48 |
| 20 | 4-48 | 6-38 | 8-41 | 10-52 | 1-00 | 3-00 | 4-58 | 7-02 | 9-12 | 11-20 | 1-16 | 3-01 | 4-43 |
| 21 | 4-45 | 6-35 | 8-38 | 10-49 | 12-57 | 2-57 | 4-55 | 6-59 | 9-09 | 11-17 | 1-13 | 2-58 | 4-40 |
| 22 | 4-41 | 6-31 | 8-34 | 10 45 | 12-53 | 2-53 | 4-51 | 6-55 | 9-05 | 11-13 | 1-09 | 2-54 | 4-36 |
| 23 | 4-38 | 6-28 | 8-31 | 10-42 | 12-50 | 2-50 | 4-48 | 6-52 | 9-02 | 11-10 | 1-06 | 2-51 | 4-33 |
| 24 | 4-33 | 6-23 | 8-26 | 10-37 | 12-45 | 2-45 | 4-43 | 6-47 | 8-57 | 11-05 | 1-01 | 2-46 | 4-28 |
| 25 | 4-29 | 6-19 கா | 8-22 | 10-33 | 12-41 | 2-41 | 4-39 | 6-43 | 8-53 | 11-01 | 12-57 | 2-42 | 4-24 |
| 26 | 4-25 | 6-15 | 8-18 | 10-29 | 12-37 | 2-37 | 4-35 | 6-39 | 8-49 | 10-57 | 12-53 | 2-38 | 4-20 |
| 27 | 4-21 | 6-11 | 8-14 | 10-25 | 12-33 | 2-33 | 4-31 | 6-35 | 8-45 | 10-53 | 12-49 | 2-34 | 4-16 |
| 28 | 4-17 | 6-07 | 8-10 | 10-21 | 12-29நப | 2-29 | 4-27 | 6-31 | 8-41 | 10-49 | 12-45 | 2-30 | 4-12 |
| 29 | 4-14 | 6-04 | 8-07 | 10-18 | 12-26 | 2-26 | 4-24 | 6-28 மா | 8-38 | 10-46 | 12-42 | 2-27 | 4-09 |
| 30 | 4-11 | 601வை | 8-04 | 10-15 | 12-23 | 2-23 | 4-21 | 6-25 | 8-35 | 10-43 | 12-39 | 2-24 | 4-06 |
| 31 | 4-06 | 5-56 | 7-59 | 10-10 | 12-18 | 2-18 | 4-16 | 6-20 | 8-30 | 10-38 | 12-34 | 2-19 | 4-01 |

சித்தார்த்தி ஞூ சித்திரை மீ 31-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு குழந்தை பிறந்தது என வைத்துக்கொள்ளுவோம். அக்குழந்தை பிறந்த நேரத்தின் உதய இலக்கினம், சக்கரத்தின் உதவியுடன் பார்க்கும்பொழுது கன்னி இலக்கினம் என வருகின்றது.

# காலவோரை அறிந்து சுபகருமங்களை நடத்தி நற்பலன்களை அடைவீர்

| ம மி. ம மி<br>முத வரை | ஞாயிறு | திங்கள் | செவ்வா | புதன் | வியாழ | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | |
| 6-00 – 7-00 | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி |
| 7-00 – 8-00 | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு |
| 8-00 – 9-00 | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் |
| 9-00 – 10-00 | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் |
| 10-00 – 11-00 | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர |
| 11-00 – 12-00 | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் |
| 12-00 – 1-00 | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர |
| 1-00 – 2-00 | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி |
| 2-00 – 3-00 | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு |
| 3-00 – 4-00 | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் |
| 4-00 – 5-00 | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் |
| 5-00 – 6-00 | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர |
| **இரவு** | | | | | | | |
| 6-00 – 7-00 | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் |
| 7-00 – 8-00 | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திரன் |
| 8-00 – 9-00 | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி |
| 9-00 – 10-00 | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு |
| 10-00 – 11-00 | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் |
| 11-00 – 12-00 | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் |
| 12-00 – 1-00 | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிரன் |
| 1-00 – 2-00 | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் |
| 2-00 – 3-00 | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திரன் |
| 3-00 – 4-00 | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு | சுக்கிர | சனி |
| 4-00 – 5-00 | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் | புதன் | குரு |
| 5-00 – 6-00 | புதன் | குரு | சுக்கிர | சனி | சூரியன் | சந்திர | செவ் |

**குறிப்பு:** மேற்காட்டிய மணிகள் காலை 6 மணி தொடக்கமாகும். இம்மணிகளுடன் அவ்வத் தேதிகளுக்குரிய சூரிய உதய மணி நிமிடங்களைக் கூட்டிக் கணக்கிடவும். சூரிய உதயம் 6 மணிக்கு முந்தினால், மேற் காட்டிய மணி நிமிடங்களில் கழித்தும்; 6 மணிக்குப் பிந்தினால் கூட்டியும் கொள்க.

**சூரிய ஓரை:** உத்தியோகம், வியாபாரஞ் செய்ய, பெரியோரின் நட்பைப் பெறுவதற்கு நல்லது.

**சந்திர ஓரை:** வியாபாரம், விவாகம் முதலிய சுபகருமப்பேச்சு ஆரம்பித்தல், பிரயாணம், கப்பல் யாத்திரை செய்தல், மாதாவழியோரைக் காண்பதற்கு நல்லது.

**செவ்வாய் ஓரை:** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாக வைத்திருப்பதற்கு நல்லது. ஆனல், சுபகருமங்கள் எதையும் செய்யக் கூடாது.

**புதன் ஓரை:** எல்லாவித எழுத்து வேலைகளுக்குப் பரீட்சை எழுதவும், சட்டத்தரகளைக் கலந்து ஆலோசிக்கவும், கணிதம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி செய்வதற்கும் நல்லது.

**குரு ஓரை:** எல்லாச் சுப கருமங்களுக்கும், செல்வந்தரின் தயவை நாடுவதற்கும், உத்தியோகங்கள், பணவிஷய விபரங்களைத் தொடங்குவதற்கும் நல்லது.

**சுக்கிரன் ஓரை:** எல்லாச் சுப கருமங்களை நடத்துவதற்கும், விவாகப்பேச்சு ஆரம்பிப்பதற்கும், மருந்து உண்பதற்கும், வாகனங்கள் வாங்குவதற்கும் நல்லது.

**சனி ஓரை:** இவ்வோரை மிகக் கொடியது. நிலங்கள், அவை சம்பந்தமான சொத்துக்களைப்பற்றிய நடவடிக்கை எடுப்பதற்கும் நல்லது.

# விரதம்

மு. இளையதம்பி பி. ஏ. (லண்டன்)
(ஆசிரியர், 'முப்பொருள் உண்மைவிளக்கம்')

கடவுளை மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் வழிபடுதலே அன்போடு செய்யும் வழிபாடாகும். பொறிவழியே செல்லும் புலன்களை செல்லாது தடுத்து வழிபடுவதற்கு விரதம் இன்றியமையாதது.

விரதம் நைமித்தியவிரதம் நித்திய விரதம்என இருவகைப்படும். கொலை, களவு, கள், காமம், பொய்யாமை, முதலிய பாதகச் செயலினின்று விலகிஒழுகும் மனவலிமையுள்ளவர்கள் நித்தியவிரதம் அநுட்டிப்பவர்களாவர். நோன்பென்பதுவே கொன்று தின்னாமை என்பது நீதிமொழியாகும் எந்த உயிரையும் கொன்று தின்னும் பழக்கத்தை விலக்கி ஒருவர் நடந்து கொள்வராயின் அவர் சிறந்தவிரதத்தை அநுட்டிப்பவராகும்.

'காதல் கவறாடல்
கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்த
லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகும்
திருநாடா! செம்மை
நினையாமை பூண்டார்
நெறி,

என்று நளமகாராசனுக்கு அவனுடைய மந்திரி, சீரிய ஒழுக்கத்தினின்று விலகி ஒழுகுபவர் செல்லும் தீயவழிகளை எடுத்துக் கூறியதை அவதானிக்கலாம்; இத் தீயசெயல் ஒளை அன்றாட வாழ்க்கையில் விலக்கி ஒழுகுபவர்கள் நித்திய விரதத்தைக் கடைப்பிடிப்பவர்களாகும். இயமம், நியமம் ஆகிய சீல நெறிகளைக் கடைப்பிடித்தொழுகுதல் நித்திய விரதமாகும். கொல்லாமை கள்ளாமை, வாய்மை, இரக்கம், பொறை, வஞ்சனையில்லாமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், பிறர் மனைவியரை விரும்பாமை, சுசியுடைமை ஆகியபத்தும் இயமம் எனப்படும். நியமம் என்பது தவம், மனமுவந்திருத்தல், கடவுளில் விசுவாசம், சற்பாத்திரருக்குப் பொருள் கொடுத்தல், மூத்தோரை வழிபடுதல், உண்மைநூல்களைக் கேட்டல், கர்வமின்றி அடங்கி ஒழுகுதல், பகுத்தறிதல், விரதம், செபம் என்னும் பத்துமாம்.

புலன்கள் எந்நேரமும் ஓடிக் கொண்டே ருக்கும். அவைகளை வென்று கொள்வது கஷ்டம்.

, ஓரவொட்டார் ஒன்றை
யுன்னவொட்டார் மலரிட்டுன்
சேரவொட்டா ரைவர் /தாள்
செய்வதென்யான்

என்று அருணகிரிநாதர் கூறுவதைக் கவனிக்கலாம். ஆகையால் பொறிவழியே புலன்செல்லாது தடுத்தற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் திரிகரணசுத்தியோடு

வழிபடுதல் அவசியமாகும். அவ்விதம் செய்தற்கு நைமித்திய விரதங்கள் பெருந்துணையாய் இருக்கின்றன. எல்லாவிரதங்களையும் அநுட்டிப்பது எல்லோருக்கும் சாத்தியமல்ல ஆகையால் பொருள், இடம், காலம், வசதி, பக்தி ஆகியவைகளுக்கேற்பவே எவரும் விரதங்களை அனுட்டிக்கமுடியும். நோயாளி, வயோதிபர், வீடற்றவர், பொருளற்றவர் ஆகியோர் நைமித்தியவிரதங்களை அநுட்டிப்பது கஷ்டமாகும். அவர்கள் புலன்களை அடக்குவதும் கஷ்டம். அவர்கள் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றலாம். அதுவும் முடியாதோர் தாம்வழிபடும் தெய்வத்தின் படத்திற்கு மலரிட்டு வணங்கி மனமுருகி அன்புசெலுத்தலாம்.

'சகமலா தடிமையில்லை
  தாளலாற் றுணையுமில்லை
நகமெலாந் தேயக்கையால்
  நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க
  முன்பணிந்தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயிலில்லை
  ஐயன் ஐயனுர்க்கே

என்று கூறுகிறது அப்பருடைய தேவாரம்.

பிரதான விரதங்கள் சிவவிரதம், தேவிவிரதம் விநாயகவிரதம், சுப்பிரமணியவிரதம் என்பனவாம் சிவ விரதங்களிலே சிவராத்திரி விரதமும், பிரதோஷவிரதமும், தேவி விரதங்களிலே நவராத்திரி விரதமும் விநாயக விரதங்களிலே, விநாயக சதுர்த்திவிரதமும், விநாயகஷஷ்டி விரதமும், சுப்பிரமனிய விரதங்களில் கந்தஷஷ்டி விரதமும் சிறந்தவாகும்.

சிவரரத்திரி விரதம் மாசிமாதத்திலே கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசித் திதியில் சிவபெருமானை வழிபடும் விரதமாகும். அன்று உபவாசம் இருந்து இரவு நான்கு ஜாமமும் சிவபூசை செய்தல் வேண்டும். சிவபூசை செய்யாதவர்கள் நித்திரையின்றி ஸ்ரீ பஞ்சாட்சர செபம் செய்து சிவாலய தரிசனம் செய்ய வேண்டும் சிவராத்திரியில் பதினன்கு நாளிகைக்கு மேல் லிங்கோற்ப காலமெனப்படும் குறித்த லிங்கோற்பவகாலத்திலாகுதல் நித்திரைசெய்யாது சிவவழிபாடு செய்தல் நன்று. இக்காலத்தில் சிவதரிசனம் செய்வது மிகவும உத்தமம். இது போன்று ஏனைய விரதங்களும் அவ்வவ் காலங்களில் நெறிதவறுது அனுட்டிக்கப்படவேண்டும். விரததினங்களில் காமம், கோபம், பொருமை முதலிய குற்றங்களைக் களைய வேண்டும்.

விரதங்களை அனுட்டிப்பதால் நற்பலன்கள் ஏற்படும். இறைவனுடைய கிருபை உண்டு. நினைத்த காரியசித்தி, பாவநீக்கம், மனமகிழ்ச்சி, பக்தி, நோயின்மை, மனத்தூய்மை, ஆயுள்விருத்தி இவை போன்ற பல நன்மைகள் விரதங்களை அனுட்டிப்பதால் கிடைக்கும்.

### அட்டமி - நவமி

பட்டணத்து வாழுகின்ற
  பாக்கியவான்காள் கேட்டிடுவீர்
அட்டமி நவமிதனை
  அறிந்து செயல்படுவீர், அதனைவிட்டு
இட்டமுடன் நடப்பீராகில்
  என்னபடியென்றே சொல்லமுடியா
கட்டிய மனைவியுடன்
  ஈட்டிய பொருளனைத்தும்
நட்டமதாய்ப் போகுமென்று
  நவிலுகின்ருர் நம்முன்னேரே.

# அங்கங்களின் அதிருஷ்டம்

## (சாமுத்திரிகா இலட்சணம்)

சைவசித்தாந்த நல்லறிஞர்
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் — புன்னலைக்கட்டுவன்.

ஆடவர்-மங்கையர் உடலின் அமைப்புமுறை, அங்கஇலக்கணம் அதிருஷ்டம் என்பவற்றின் ஆய்வுத் தொடரில், இம்மாத இதழில் ஆடவரின் கால்கள்—பீஜம் — ஆண்குறி, இந்திரியம், சிறுநீர் என்பவற்றின் அமைப்பையும், தன்மையும், இதனால் ஆடவருக்கு ஏற்படும் அதிஷ்டத்தையும் ஆராய்வோம்.

**ஆடவரின் கால்கள் :**

நீளமான கால்களை உடையவன் விரைவில் நடக்கக்கூடியவனுமாய், ராஜ மரியாதைகளைப் பெறுபவனுமாய் விளங்குவான். கால்கள் குட்டையாக மிகச் சிறியதாக இருந்தால் பாபியாவான். முழங்காலுக்கு மேலே உயரமாகவும் கீழே குட்டையாகவும் இருந்தால், நன்மைகளை அடைவான். கால்கள் அதிகப் பருமனுமில்லாமல் மிக்க ஒடிசலாகவும் இல்லாமல் சமமாக இருந்தால் அவன் வாகன அதிபதியாவான்.

**பீஜம் :**

பீஜங்கள் இரண்டும் சமமாக இருந்தால் அரசவாழ்வு கிடைக்கும். அத்துடன் பலம், ஆயுள் அதிகம். பீஜங்கள் சிறியவகையாக இருப்பது உத்தமம். பீஜங்கள்—கீழே தொங்கிக் கொண்டிருந்தால், பரம ஏழைகளாவார்கள். மேலே ஒட்டிக்கொண்டிருந்தால் ஆயுள் குறைவு. நீளமான சமமான பீஜங்களை உடையவர்கள் தீர்க்காயுசு உடையவர்கள். ஒன்று மேலும் ஒன்று கீழுமாக இருந்தால் வியாதியதஸ்தராவர், ஊனமான நிலை ஒற்றை பீஜத்தை மட்டுமே உடையவர்களுக்கு நீர் கண்டம் வரும் எனக் கூறுவர். அத்துடன் புத்திரபாக்கியம் குறைவு. பீஜங்கள் கோணலாக இருந்தால் கேவலமான தொழிலைச் செய்பவர்களாக இருப்பார்கள், வலது பீஜத்தில் வலஞ்சுழியிருந்தால் வியாதி. வலது பீஜத்தில் மறுவிருந்தால், பெண்ணாசை, செல்வம். நடுவில் மறு விருந்தால் ஸ்திரீ போகம். இடது புறத்தில் மறு விருந்தால். ஸ்திரீபோகத்தில் மனம் இன்மை. அத்துடன் ஞானம், மோகமின்மையுமாம்.

**ஆண்குறி**

ஆண்குறி சிறியதாக இருந்தால், செல்வந்தனாகவிருப்பான். பெரிதாக இருந்தால் பிள்ளைப்பேறு அரிது. சிறியதாக இருந்து குட்டையாக இருந்தால் அரசனாக இருப்பான். மிகநீளமாக இருந்தால் மிக்க தரித்திரம் பிடித்து அலைவான். இடப்பக்கம் சாய்வாக இருந்தால், பாபியாகவோ, வறியவனாகவோ இருப்பான். கீழ்நோக்கி சாய்ந்திருந்தால், மிக்க ஏழையாக இருப்பான், ஆண்குறியின் முன் பகுதியில் கீற்றிருந்தால், செல்வந்தர்களுடைய பெண்களோடு உறவு கிடைக்கும். லிங்கம்

சிவப்பாக இருந்தால், தனவந்தனு கவும், வெளுத்திருந்தால் தரித்திரம் பிடித்தவனுகவும் இருப்பான். லிங்கம் மங்கலான நிறத்தையுடையதாக இருப்பின் அதிகாரம் செலுத்துபவனுகவும் உயர் பதவி ஒன்றை வகிப்பவனுகவும் இருப்பார். ஆண் குறியின், தலைப்பாகம் இலந்தைப் பழத்தைப் போன்று அமைந்திருந்தால் அவர்களுக்கு இன்பமான ஆனந்த வாழ்வு அமையும் தலைப் பாகத்தின் மேல் நரம்புகள் புடைத்து எழுந்து நிற்பதே நல்லது. அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் ஆண்குறி பாம்பின் வயிறு போல நீண்டிருந்தால் பசி அதிகம் உடையவன். நடுப்பகுதியை விட முன்-பகுதிபுஷ்பம் பருமனுக இருந்தால் வறுமை. நடுப்பகுதி அகன்று விரிந்திருந்தால் செல்வ நாசம். ஆண்குறி பாம்பின் தலை போலிருந்தால் வெகு செல்வம் உண்டு. நரம்பு மிகுந்து ரோமம் அதிகமாக நெருங்கி இருந்தால் வாழ்வு தரித்திரமாகவும் துன்பமானதாகவும் அமையும்.

## இந்திரியம்

இந்திரிய மானது பூ மணம் உடையதாகவும், பாலைப்போன்ற வெண்மையாகவும் இருந்தால் அவன் குபேரனுவான். தேன் மணம் உடையதாக இருப்பின் தனவந்தனுகவும் காமுனுமாக இருப்பான். முடை நாற்றம் உடையதாக இருந்தால், அதிக மக்கட்செல்வம் உடையவனுகவும் இருப்பான். துர் நாற்றம் உடையதாகவும் கறுப்பாகவும் இருந்தால், அவன் தரித்திரம் அனுபவிப்பான் இறைச்சி நாற்றம் உடையதாகவும் இருந்தால். அவன் சிறந்த யோகியாகவும் அறிவாளியாகவும் ஞானியாகவும் திகழ்வான். மதுவின் நாற்றம் அடித்தால், அவன் புத்திர சம்பத்து உடையவனுகவும். ஆசிரியனுகவும் திகழ்வான். பூப்போலவும், அகில் சந்தணம் போலவும் இருந்தால் லட்சுமி கடாக்ஷமும் சகல செல்வமும். வாழ்வில் கிடைக்கும்.

## சிறுநீர்

சிறுநீர் விழும்போது ஒரே சீராக விழாமல் இரண்டு, மூன்று பிரிவாக பிரிந்து மடமட வென்று, இடது பக்கமிருந்து வலது பக்கமாய் விழுந்தால் அவனுக்கு ராஜவாழ்வு அமையும். சொட்டுச் சொட்டாய் ஒவ்வொரு துளியாக வீழ்ந்தால், அவன் தரித்திரனுவான். ஒரே சீராக ஒழுங்காக வீழ்ந்தால் அழகுடையவன். புத்திர சம்பத்தும் அவனுக்குக் கிடைக்கும் பெரிய தாரையாய்த் தடித்த உருவத்தில் வெளிவந்தால் அவன் செல்வந்தனுவான். இரைச்சலோடு மூத்திரம் வெளிவரின், அவன் சௌக்கியம் அனுபவிப்பான் இரைச்சல் இல்லாமல் வந்தால் தரித்திரத்தை அனுபவிப்பான் -

(தொடரும்)

**இளைஞரும் கொழுக்கட்டையும்**

இளைஞர்களிற் சிலர் பக்தியும் தெய்வீக உணர்ச்சியும் மிகைபட வாய்க்கப் பெற்றவர்களாக இருக்கிருர்கள். அதற்குக் காரணம் யாது என்று கேட்கலாம். கொழுக்கட்டை வெளிப்பார்வைக்கு எல்லாம் ஒருவிதமாய் இருக்கின்றன. ஆனுல் உள்ளே சிலவற்றுள் சாமானியமான பயறு சர்க்கரைவகைகள் அமையப்பெற்றவைகளாக இருக்கின்றன. வேறு சில பாலாடையும் சர்க்கரையும் வைக்கப்பட்டவைகளாக இருக்கின்றன' அத்தகைய சுவைநிறைந்த கொழுக்கட்டை போன்றவர்கள் பக்தி நிறைந்த தூய உள்ளம்படைத்த இளைஞர்கள்:

# நவமியில் சிறந்தது மஹா நவமி

## ஸ்ரீராமநவமி

சோதிடர் சு. அ. சுப்பிரமணியக்குருக்கள்
கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்

நவமி என்றால் ஸ்ரீராமபிரான் அவதாரம் செய்து தந்தை சொற்காத்துத் தரணி முழுவதிலும் அரக்கர் சக்தியைத் தலையெடாது செய்து, தெய்வீக இன்பவாழ்வைத் திழைய்ச் செய்த நன்னாள் என்பது அனைவர்க்கும் நினைவிற்கு வரலாம். இது மிகவும் புண்ணியம் வாய்ந்ததினம் ஒரு கோடி சூரியகிரகணக்திற்கும்; 24 ஏகாதசிவிரதம் அனுஷ்டித்த புண்ணியத்திற்கு நிகரான நாளாம்.

கடவுளே நமக்குத் தொண்டு செய்யும் குமரனாக அவதரிக்கும் பாக்கியம் பெற்ற பெற்றோரின் பாக்கியம் சாமானியமாக மதிக்கத்தக்க தன்று! அதற்கு எவ்வளவு தவமும் நியம நிஷ்டையும் தான தருமமும் செய்திருத்தல் கூடும்?

அரக்கர் சக்தி தலையெடுத்து நல்லோர் வாழவழியின்றித் தவிக்குங் காலத்திலெல்லாம் ஆண்டவன் அவதாரம் செய்தல் முறை. அவ்வித அவதாரங்களில் இராமாவதாரம் மிகமிகச் சிறப்பு வாய்ந்தது. அதனை வால்மீகியும், கம்பரும் துளசிதாசரும் தான் வருணித்தல் தகும். அஷ்டமி நவமி தொட்டது துலங்காது. என்பது உலகோர் நவிலும் சாதரணப் பழமொழி. அதனை ஆண்டவனது அம்சாவதாரமான இராமபிரான் தமது அவதாரப்பெருமையினால் மாற்றிவிடுகின்றார். தமது திருவிழாவைத் திருநாளாக மதித்துக் கொண்டாடுவோர்க்கெல்லாம் ஸ்ரீராமநவமியை, சீதையின் கணவன் பிறந்த சிறப்பு நாளாகக் கொண்டாடுவோர்க்குச் சீரும் சிறப்பும் பெருகி வருதல் கண்கர்ட்சி.

ஆனால் ரிக்தை என்னும் நவமித் திதியில் அவர் அவதரித்த காரணம் யாது? என்பது சிலர் கேள்வி? அவதார புருஷனை இஷ்டம் போல் எந்தத்திதியிலும் அவதரிக்கலாமே? தசமியில் அவதரித்தல் நல்லதல்லவா? அது பூர்ணதிதியில் சேர்ந்ததாக விளங்குகின்றதே எனவும் சிலர் கேட்பதாக வைத்துக்கொள்வோம். இராம அவதாரத்தின் முக்கிய உத்தேசம் என்ன? அரக்கர்களைச் சூனியமாகச் செய்வதல்லவா? அதற்காகவே நவமியில் தோன்றினார் நாராயணரை அம்சமாக? இனி மற்றொரு நவமியும் உண்டு. அது '' நவமியில் சிறந்தது மஹாநவமி'' என்றும்

போற்றச்செய்குன்றது. அது நவராத்திரிவிழாவில் வரும் நவமியாகும். அன்று ஸ்ரீசரஸ்வதிதேவியைப் பூஜைசெய்கின்றோம். ஸ்ரீ சரஸ்வதி தேவியார். பரமசிவனுடைய சகோதர். மகாவிஷ்ணுவின் ச கோ த ரி. பார்வதி. பரமசிவனுக்குச் சடையும் சந்திரகலையும் முக்கண்ணும் சுத்த படிகவடிவமும் உண்டென்று வேதங் கூறுகின்றது. அதனைத் தட்சணாமூர்த்தி வடிவத்திலும் காணலாம். ஞானத்தைக் கொடுக்கும் பரமசிவனது திருவுருவந்தானே அதுவும். தட்சிணாமூர்த்தியின் கையில் படிகமாலையும், புத்தகமும் கூறப்பட்டுள்ளன. அந்தச் சதாசிவமூர்த்தியே சகல வித்தைகளுக்கும் ஈசன் (ஈசானன் - பிரபு).

❀

## விநாயக சதுர்த்தியன்று

### பாராயணம் செய்வதற்குரிய துதி

தேவர்தொழ வெறுங்கருணைச் செல்வனே போற்றி
சிறந்தொளிரு மங்கல சொரூபனே போற்றி!
ஒவறு சித்திகளனைத்தும் உதவுவோய் போற்றி
ஒலிகெழுகிண் கிணிபாத சாலநூபுரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றிமத தாரை
விரவிய திண்கபோலனே போற்றி! நினதருளால்
பாவமொடு பலபிணியும் பம்புவறு மைகளும்
பலவான இடர்களையும் பாற்றுகஇன் புறவே.

— விநாயகபுராணம்

❀

மக்களில் பெரும்பான்மையோர் ஒரு பூந்தோட்டத்தின் அழகைக்கண்டு இரசிக்கின்றனர். அத்தோட்டத்தை உருவாக்கியவனைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அதே விதத்தில் இப்பிரபஞ்சம் என்னும் தோட்டத்தை மக்கள் கண்டு களித்துக்கொண்டிருக்கின்றனர். இதற்கு ஆதிமூலமாயிருக்கும் இறைவனைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. உலகுக்கு முதல் காரணமாகிய இறைவனை அடைவதுதான் மானுடப் பிறவியின் குறிக்கோள். தோட்டத்தை இரசிப்பதற்கல்ல

X X X

இருளுக்குந் தேவையுண்டு. காரி இருள் இருப்பதனுல்தான் சுடர்வெளிச்சத்தின் பெருமை நன்கு விளங்குகின்றது. காமம், குரோதம் முதலியன தம்மளவில் தீயவைகளே. அப்படியிருந்தும் அவைகளைக் கடவுள் ஏன் படைத்துள்ளார்? அத்தகைய தீமைகளை வெல்லுபவர்கள் சான்றோர் ஆகின்றனர்.

# 'ழ' வின் சிறப்பு

த. விஸ்வநாத சர்மா

தமிழ் மொழி இனிமையானது. எளிமையானது. படிக்கப் படிக்கச் சுவை கூட்டும் சிறப்புடையது. அதனுல் தான் "தமிழ் மொழியைப் போல் இனிதாவது எங்கும் காணேம்" என்றூர் பாரதியார். "தமிழினும் சுவையுள்ள சொல்லை யான் வேறெங்கும் கண்டதில்லை" என்றூர் மற்றொரு கவிஞர். அண்மையில் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே தமிழைப்பற்றி சொற்பொழிவாற்றிய தமிழ் கற்ற லண்டன் சர்வகலாசாலைப் பேராசிரியர் கோ. ஆசர். பி. ஏ. எச்டி. "தமிழில் உள்ள 'ழ' எழுத்து உலகமொழி யாராச்சியாளர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. அந்தச் சுவையான எழுத்து வேறு எந்த மொழியிலும் இல்லாததால் தமிழ் தனிச் சிறப்புடையதாக இருக்கிறது" என்று 'ழ' எழுத்தைப் பாராட்டினுர். அந்த ழ-ம் அதன் இன எழுத்துக்களும் எப்படி தமிழில் பின்னிக் கிடக்கின்றன என்று ஆராய்வோம்.

மொழி என்பதில் 'ழ' வின் இன எழுத்து 'ழி' இருப்பதனுல் கேட்கதற்கு அந்தச் சொல் இனிமையாய இருக்கிறது. நம்மொழியின் பெயரிலே 'ழ' இருப்பது குறிப்பிடத் தக்கது. மனிதன் உலகில் பிறந்து ஜீவித்த பின் இறக்கிருன். ஜீவிதம் என்பதை தமிழில் வாழ்க்கை என்பர். அதிலும் 'ழ, இருக்கிறதல்லவா?

காது கேளாத செவிடனைப் பற்றி கவலை இல்லை. பேசஇயலாத ஊமையும் பரவாயில்லை. மூக்கில்லாத மூக்கரையன் கூட எப்படியோ சமாளித்துக் கொள்கிருன். இவர்களுக்கெல்லாம் பிறர்உதவி தேவை இல்லை. கண் இல்லாதவன் பாடு ரொம்பக் கஷ்டம். அவர்களைக் கண்டால் கல்லான இதயமும் கரையும். இவ்வளவு முக்கியமான உறுப்பின் பெயரில் 'ழ' இருந்து 'விழி' என்று சிறப்பாக அமைகிறது.

மனைவியை இல்லக்கிழத்தி எனலாம். கணவனைக் கொழுநன் எனலாம். அவர்களுக்கு பிறக்கும் மகவை குழந்தை எனலாம். இத்தியாதி சொற்களிலெல்லாம் 'ழ' இருக்கிறது. மனிதனை வாழ்விக்கும் 'வாழ்வு' என்பதிலும் சாகடிக்கும் 'எழவு, என்பதிலும் 'ழ' இருக்கிறது.

வாழ்க்கைக்கு அவசியமானவற்றை பயிரிட உதவும் 'கழனி'யிலும் அதனை ஏர்கொண்டு செம்மையாக்கும் தொழிலான 'உழவன்' என்பதிலும் 'ழ' இருக்கிறது.

மனிதன் முன்னேறுவதற்கு முக்கியமான பாதையை 'வழி' என்றும் அவன் கொண்டாடும் சந்தோஷக் களியாட்டத்தை 'மகிழ்ச்சி விழா' என்றும் 'ழ' அமைந்த சொற்களை குறிப்பிடுகிருன்.

குழந்தை வளர்ந்து பால்ய வாலிபப் பருவங்களைக் கடந்து அடையும்

போது 'ழ' இணைந்த சொல் தான் 'கிழவன்' அல்லது 'கிழவி' என்று அழைக்க உதவுகிறது.

உணவுப் பொருள்களில் 'வைட்டமின்' சத்துக்களை திரட்டி வைத்திருப்பது கனிகளே. அவற்றைப் 'பழங்கள்' என்று 'ழ' சேர்த்த சொல்லிட்டுத்தான் நம்மில் பெரும்பாலோர் அழைக்கிறோம். பழங்களில் பலாப்பழம், விழாம்பழம், நாவற்பழம், என்று எத்தனையோ இருந்தும் சாமி கும்பிடுவதற்கு 'ழ' சேர்ந்து வார்த்தையுள்ள 'வாழைப் பழ' த்தைத் தான் வைத்துப் படைக்கிறான். அடேயப்பா! 'ழ' வுக்கு எவ்வளவு மதிப்பு.

மிருகங்களில் மிகவும் பெரிதும் இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் கொடுக்கும் யானைக்கு மறு பெயர் 'ழ' எழுத்துள்ள 'வேழம்' என்பதை நாமறிந்ததே.

உப்பு இல்லாவிடில் நம் உணவு ருசியாக இராது. அந்த உப்பைக் கொடுக்கும் கடல் 'ஆழி' என்று அழகிய பெயரை 'ழ' இன வெழுத்துச் சேர்க்கையால் தான் பெற்றிருக்கிறது.

அந்தக் காலத்தில் போர் முரசு கொட்டும் என்பதை விட 'ழ' வுள்ள 'முழங்கும்' என்று வார்த்தையை போட்டு முரசு முழங்கும் என்றால் தான் வீரம் ஒலிக்கிறது.

பூக்களில் பெரிதும் மிக மனமுள்ளதும் கன்னிப் பெண்களின் தலையில் கூந்தலை நிரப்புவதும் அழகு செய்வதும் 'ழ' சேர்ந்த 'தாழம்' பூவே ஆகும்.

ஒருவரைப் போற்றி ஆசீர்வதிக்கும் 'வாழ்த்து' என்பதிலும் ஒருவரின் பித்தமான போக்கை 'வழக்கம், பழக்கம்,' என்பதிலும் ஒருவரின் லட்சணத்தை 'அழகு' என்பதிலும் இருவர் முறையீட்டை 'வழக்கு' என்பதிலும் 'ழ' காணக்கிடக்கின்றது.

சூரியன் மறையும் திக்கைவிட உதிக்கும் திக்கையே திசையறிய கொண்டார்கள். அத்திசைக்கு மட்டும் மற்றெந்த திசையிலுமில்லாத 'ழ' வைச் சேர்த்து 'கிழக்கு' எனப் பெயரிட்டு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

துயர் நிரம்ப கண்ணீர் விடுவதை 'அழுகை' யென்றும் சந்தோஷத்தால் நிறைந்திருப்பதை 'மகிழ்ச்சி' என்றும் உடல் தளர்ச்சியுற்ற காலத்தில் உதவும் ஊன்றுகோலை 'கழி' என்றும் கூறுவதிலிருந்து 'ழ' உறவின் சிறப்பு விளங்குகின்றது.

குழந்தையின் இன்மொழியை 'மழலை' என சிறப்பித்து 'குழலினிது யாழிலினிது என்பர். தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்கிறார் வள்ளுவர்.

❀

**சந்தேகமும் பிரமஞானமும்**

**கயமையில் உழல்பவர்களுக்குக் கடவுள் விசுவாசம் வருவதில்லை, அவர்கள் எப்பொழுதும் சந்தேகப் பேர்வழிகள். ஆனால் சந்தேகம் யாருக்குமே அடியோடு அகன்றுபோய்விடுவதில்லை. பிரம்மஞானம் அடையப்பெற்றவனுக்குத்தான் சந்தேகம் ஒன்றும் வருவதில்லை.**

# பல்லி சொல்வதற்குப் பலன் உண்டா?

பல்லி சொல்லுக்குப் பலன் உண்டா என்பது சிலர் கேள்வி. கெவுளி சாஸ்திரம் மூடத்தனமானதென்று நவீன நாகரீகர்கள் கூறுகிறார்கள். ஆனால் பல்லி சொல்லுக்குப் பலன் உண்டென்றும் கெவுளி சாஸ்திரம் உண்மையென்றும் விளக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சியென்றும் கோவைத் தமிழறிஞறிரான திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் பீ. ஏ. அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் விளக்கினார். அவர் பெரிய புராணத்தைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியபொழுது அறுபத்துநான்கு கலைகளில் பிபீலிகாவாதம் என்ற பட்சி மிருக பாஷை ஒன்றென்றும் அது உண்மையென்றும் சொன்னார். ஒரு நாட்டுப்புற வழியில் பிள்ளையார் அமைந்த அரசமரத்தடியில் இருவர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள் அப்பொழுது பல்லிச்சாஸ்திரம் தெரிந்த ஒருவர் அங்கே செல்லப்பல்லி ஏதோ சொல்லியது அதனைக் கேட்ட பல்லிச்சாஸ்திரி ஐயோ என்று வருத்தப்பட்டார். அங்கே இருந்த இருவரும் நாங்கள் இவ்வளவு நேரமாய் இங்கேயிருக்கிறோம். நீர் என்ன இங்கே வந்து இப்பொழுது ஐயோ அம்மா என்று சத்துகிறீரே என்றார்கள் உடனே அவர் ஐயா நான் சொல்வதை நம்புங்கள் நீங்கள் உட்கார்ந்திருக்கிற இந்தக் கல்லடியில் ஓர் பாம்பு இருக்கிறது. அரை நாழிகையில் வரப்போகிற ஒரு புதுமாப்பிள்ளையைக் கடிக்கப் போகிறது. அவர் சாகப்போகிறார் என்றார். உடனே கல்லைப்புரட்ட அதில் பாம்பு இருக்கப்பாம்பைக்கொன்று எறிந்துவிட்டார்கள் பாம்பைக்கொன்ற பின் மாப்பிள்ளையைக் எப்படிக் கடிக்கும்! சிறிது நேரத்தில் மாப்பிள்ளை வந்தார் ஐயா உம்மைப் பாம்பு கடித்துப் நீர் சாகப்போகிறதாக இந்தப் பல்லிச்சாஸ்திரி சொல்லுகிறார். நாங்கள் பாம்பைக்கொன்று எறிந்துவிட்டோம் என்றார்கள். மாப்பிள்ளை அப்படியா! பாம்பு எங்கே என்றார். அதோ கிடக்கிறது பாரும் என்றார்கள். அவர் பாம்பு கிடந்த இடத்திற்கு போய் ஒரு குச்சியால் அதன் தலையை தூக்கினார் செத்த பாம்பு அவரை உடனே கையில் கடிக்க மணமகன் பிணமகனானார். முற்றிலும் இறவாமல் குற்றுயிராயிருந்த பாம்பு காற்றினால் ஊத்துயிர் பெற்றிருந்ததால் அவரை கடித்துவிட்டதென்று தெரிய வந்தது

## ஆலய வழிபாடு

கண்ணுதல் ஆலயம் நோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில் புகும் கால்களே கால்கள்
பெண்ணொருபாகனைப் பணியும் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னா
பரன்சரிதையே கேட்கப்படும் செவியே செவிகள்
அண்ணல் பொலங்கழல் நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்
அவன் அடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.

# நவரத்தின மோதிரம்

நவரத்தினங்களை மோதிரத்தில் அமைக்கும் பொழுது நடுப்பகுதி சூரியனுக்கும், கிழகக்கு சுக்கிரனுக்கும், தென்கிழக்கு சந்திரனுக்கும், தெற்கு செவ்வாய்க்கும்; தென்மேற்கு ராகுவுக்கும், மேற்கு சனிக்கும், வடமேற்கு குருவுக்கும், வடக்கு கேதுவுக்கும் வடகிழக்கு புதனுக்கும் உரிய இடங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| வடமேற்கு<br>புஷ்பராகம்<br>குரு | வடக்கு<br>வைடூரியம்<br>கேது | வடகிழக்கு<br>மரகதம்<br>புதன் |
| மேற்கு<br>நீலம்<br>சனி | மாணிக்கம்<br>சூரியன் | கிழக்கு<br>வைரம்<br>சுக்கிரன் |
| கோமேதகம்<br>இராகு<br>தென்மேற்கு | பவளம்<br>செவ்வாய்<br>தெற்கு | தென்கிழக்கு<br>முத்து<br>சந்திரன் |

சூரியனது இரத்தினமான மாணிக்கத்தை நடுவில் வைத்து வைரம், முத்து, பவளம், கோமேதகம், நீலம், புட்பராகம், வைடூர்யம், மரகதம் ஆகியவைகளை முறையே கிழக்குத் திக்குமுதல் வடகிழக்கு வரையில் வைத்து மோதிரத்தில் இழைக்கவேண்டும். இப்படி சாஸ்திரோக்தமாக இழைக்கப்பட்ட நவரத்தின மோதிரத்தை யாவரும் அணிந்துகொள்வதால், கிரகங்களின் தோஷங்கள், தீமைகள் நீங்கி சகல சௌபாக்கியங்களுடன் வாழலாம்.

---

சோதிட அறிவைப் பூர்த்திசெய்ய

சோதிடபரிபாலினி படியுங்கள்

தமிழகத்தி[illegible]ந்து வெளிவரும்

எண்கணித புத்தகங்கள், பிரபல அறிஞர்களின் கதை,
கட்டுரைகள், மர்ம நாவல்கள், சித்திரக் கதைகள்,
சகலவிதமான சஞ்சிகைகளும் பெற்றுக்கொள்ள

யாழ்-நகரில் ஒரே புத்தக நிலையம்

# ராஜன் புத்தகசாலை

பொது நூல்நிலையங்களுக்கு விஷேச கழிவுகளுண்டு

விபரங்களுக்கு

# ராஜன் புத்தகசாலை

J. M. C. பில்டிங்

12, பஸ் நிலையத்து[illegible] யாழ்ப்பாணம்.

கிளை

ராஜன் புக் சென்ரர்

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை இதன் ஆசிரியர் பிரம்மஸ்ரீ இ. வெங்கடேசஐயர் அவர்களால் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பித்து வெளியீடப்பெற்றது.